06

உ

வேலுமயிலுந் துணை.

தென்சேரிகிரித்

தோத்திரப்பிரபந்தம்

திருப்பூர்

ஸ்ரீ கோவிந்தசாமி ஆச்சாரியாரால்

இயற்றி

ஸ்ரீ கிருஷ்ண பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

...தர் செய்தது. விலை அணா 4

ഒ26:417
N23
177676

உ

வேலுமயிலுந் துணை

தென்சேரிகிரித்

தோத்திரப் பிரபந்தம்.

திருப்பூர்

ஸ்ரீ. கோவிந்தசாமி ஆச்சாரியாரால்

இயற்றி

ஸ்ரீ கிருஷ்ண பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

ரிஜிஸ்தர் செய்தது. விலை அணா 4.

உ

சிறப்புப்பாயிரம்.

திருப்பூர் முனிசிபல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்,
ஸ்ரீமத் கம்பராமாயணப் பிரசங்க வித்துவானுமாகிய
முத்தமிழ்க்கவி,

ப்ரும்மஸ்ரீ C. S. முத்துஸ்வாமி அய்யரவர்களியற்றியவை.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பரிதிமதி விழிகளெனப் படைத்ததிரு மான்மருகன் பழமை யான
சுருதிமதித் திடலரிய சுடர்வடிவேல் விட்டவுணர் தொகுதி யாவும்
பொருதிமகி ழகரமெனப் பொலிபுலவர் தலைவனடி போற்றி யென்றுங்
கருதிமதி யெனுமடியார்க் கருள்புரிதென் சேரிகிரித் தலஞ்சேர் மூர்த்தி.

குன்றுதொறு மாடல்புரி குறவர்மட வரற்குகந்த குறிஞ்சித் தெய்வம்
மன்றுணட மாடுமண்ணல் மனமகிழ மலரயற்கு மதிமா னாகி
நின்றுபிர ணவப்பொருளை நிகழ்த்தியதென் சேரிகிரி நிமல னைந்தை
தன்றிருத்தாட் கணிகலனாய்த் திகழ்தரச்சொன் மாலைபல சாத்தவெண்ணி

பூமாலை வாடுறும்பொன் மணிமாலை பொள்ளனுறும் புலவர் பாடும்
பாமாலை யேமாலை யாமென்ன நான்மணியாம் பனுவன் மாலை
தேமாலை பள்ளியெழில் வெண்பாவந் தாதிதிருப் பதிகஞ் செய்தான்
நாமாண்பு திகழ்சினி வாசனுபர் தவப்பயனாய் ஞாலத் துற்றோன்.

குலநலமுங் குணநலமுங் குலவிவிளங் குறுமாண்பன் கோக்கள் போற்றுங்
கலைநலமு மிகப்படைத்த கவிஞருங் கவிவாணர் கருத்துள் வைத்துப்
பலநலமும் புரிந்திடச்சற் பாத்திரன்றென் சேரிகிரி பயிலும் பொற்பூ
தலநலமாக் கொண்டாடுங் கோவிந்த சாமியெனுந் தமிழ்வல் லோனே

இந்திரன்செய் மாமகமோ வெண்கணன்வாழ் வீட்டிதமோ விறைவன் [சென்னிச்
சந்திரனொ டொருந்திகழுந் தன்னியல்போ தண்டமிழின் றகைமை தானோ
மைந்தர்களின் வாழ்நாளோ கோவிந்த சாமியுமை மைந்தற் கீந்த
செந்தமிழி னின்சுவையாற் சிறந்ததுவப் பென்னென்று செப்பு கேனே

திருப்பூர் வைத்தியர்,

ஸ்ரீமான் சி. சொக்கநாதபிள்ளை அவர்கள் இயற்றியவை

விருந்தினரும் பொருந்தினருஞ் செந்துவர்வாய் விரும்பி
மேவுதிருச் சந்தநங்கை மார்புடையார் விளங்கப்
பெருந்திணையு நூலகத்த நறுஞ்சுனையும் விளையும்
பெருவளங்கொ டென்சேரிக் கிரிவிளங்கும் பெருமான்

குருந்தினையுங் கடம்பினையு மணிக்ககழற் கமலங்
சுணமிகவா தெனக்குறித்துக் குளிர்மொழியாம் வரிகள்
வருந்தினமும் புரந்தருள்க புனைந்தருள்க எனவே
வரவிடுத்தான் கோவிந்தசாமி வரோதயனே

சொன்னயம் பலபல தோன்ற நிற்றலால்
மன்னிய பொருணய மருவு மாட்சியால்
என்னையா ளுடையவன் புகழி யம்பலால்
நன்னய மிதுவென நயக்கும் நெஞ்சமே

பள்ளபாளையம் மாணவர் தமிழ்ச் சங்கத்தலைவர்

ஸ்ரீமான் N. வையாபுரி பிள்ளை அவர்கள் இயற்றியவை.

மானந்த முதற்கொண்டு வழங்கா நின்ற
வரைகளெலாந் தனக்காக்கி வலம்பெற் றோங்குந்
தேவிந்தத் தென்சேரிச் செவ்வே ளென்று
தெளிந்துபதம் பரவுமன்பர் தினமும் போற்றப்
பாவிந்து நிகர்தோளுக் கிணங்கச் சூட்டும்
பாமாலை யீதிதென்று பரிந்தே கொள்ளக்
கோவிந்த சாமியெனும் புலவன் காதல்
கொண்டினிய பிரபந்தங் கூறி னானால்.

முத்தமிழின் சுவையறிந்து மொழிபே ரின்ப
மூதறிஞர் பாடலிதா மெனவெல் லாருந்
தத்தமன தாரமொழி தரத்தென் சேரிச்
சண்முகன்மேற் சாற்றியநூல் நான்கா மஃதிற்
பத்திதரு நான்மணியின் மாலை யொன்று
பரிவினன்பர் பகர்பள்ளி யெழுச்சி யொன்று
வித்தகமார் வெண்பாவந் தாதி யொன்று
வினைதீர்க்கும் பதிகமொன் றாய் விளக்கிற் றம்மா.

உலகினிலேழ் எனவிளங்குங் கீர்த்தி தம்முள்
ஒன்றாகி யுலகமுள வரையும் பொன்றா
நிலகிடுநற் பிரபந்த மெனவுட் கொண்டே
யிராறு புயற்கிசைத்த நூல்கள் தம்மால்
விலகுமிரு வினைநோய்கள் மெய்யன் பர்க்கே
வெற்றிதரு வான்வேலைக் கையிற் கொண்டோன்
நிலவுமருள் மிகப்பெறலாம் உலகுக் கெல்லாம்
நிலையிதனை யன்றியுண்டோ நிகழ்த்து வீரே.

பிழை திருத்தம்

பக்கம்.	செய்யுள்	வரி.	பிழை.	திருத்தம்.
3	10	1	கடம்பணிந் [illegible].	கடம்பணி
6	16	28	அடைக்கல	அடைக்கலம்
7	17	1	சுடக்கரியி	கடக்கரியி
10	26	3	பழனிநறுஞ்	பன்னிருபூஞ்
11	32	6	புரிதாயிலே	புரிந்தாயிலே
18	5	1	கிரகுவான்ங்	கிரங்குவான்
27	62	1	எத்தார்	எத்தர்ர்
,,	66	2	வேமேறுன்	மேவெறுன்
32	18	2	வாயிழிந்த	வாழியிந்த

குறிப்பு:—7வது பக்கம் 16வது செய்யுள் 3-4 வரிகளுக்கிடையில் ‘தென்சேரியில் வாழ்தேவே யடைக்கல’ என்று சேர்த்துக்கொள்க 28வது பக்கம் 69வது செய்யுள் முதலடியை “செப்புந்தரமாமே தென்சேரியாய் நின்சீர்” என்று திருத்திக்கொள்க.

இப்பிழைகள் சில பிரதிகளில் மாத்திரம் காணப்படும்.

உ

வேலுமயிலுந்துணை

தென்சேரிகிரி நான்மணிமாலை.

விநாயக வணக்கம்.

வெண்பா.

வான்மணி மாலைபுனை வள்ளிமனை வாளனுக்கு
நான் மணி மாலை சொல நற்றுணையாம்—தேன்மணக்கும்
நந்தா வளவனத்தின் நற்கரக நீர்கவிழ்த்த
தந்தா வளமுகத்தன் றாள்.

நூல். வெண்பா.

மணி கொண்ட காராழி வையகத்திற் சான்ற
வணி கொண்ட தென்சேரி யண்ணல்—பணிகொண்ட
பாயலான் றன்மருக பாராதி யாமுனக்கு
நீயலா தில்லை நிகர். (1)

கலித்துறை.

நிகர்வின ளாகி நிதமும் பணிமின் நினைத்திடினீர்
நுகர்வன முன்செய் வினைப்பய னாகு நுந்நண்ணறிவாற்
சகநெறி யாய்ந்துதென் சேரி விசாகனைச் சண்முகனை
வகிரிழை நுண்ணிடை வள்ளி மணாளனை வாழ்த்துமினே. (2)

விருத்தம்.

மின்சேரிடை யும்பூண்முலை யுங்கூர்விழி வேலும்
பொன்சேர்குழை யுஞ்சீர்பொலி கின்றார்மயல் வீழும்
என்சோர்வது வுந்தீவினை யுந்தீருபெ னிறைவா
தென்சேரிவ ருஞ்சேவக செஞ்சேவடி யருளே. (3)

நேரிசையாசிரியப்பா.

அடியரு ளொருவனும் படியருள் புரிவாய்
ஆரணத் துறையுங் காரணப் பொருளே
இளஞா யிறெனு மொளிமே னியனே
ஈன மொழிப்பாய் மோன மளிப்பாய்
உன்சீ ரெளிதோ தென்சேரியனே
ஊனாய் உயிராய் வானாய் வளியாய்
எரியாய் நீராய் இருநில மாயினை
ஏரிள வனமுலைத் தேரக லல்குல்
ஐயநுண் ணிடைத் தெய்வபானையும்
ஒப்பிலா வள்ளியும் அற்பொடு சூழ
ஓங்கிய உவகை நீங்காய்
ஔவியப் பிறப்பை யழித்திடுங் குருவே. (4)

நேரிசை வெண்பா.

குருமணிகள் வில்வீசும் தென்சேரிக் குன்றும்
ஒருமையொடு வேன்மயிலென் றுள்ளும்—பெருமையார்
சித்த மலரும் செழுங்கடகம் சேரா
றத்த முடையா னகம் (5)

கட்டளைக் கலித்துறை.

அன்பருக் கன்பனே தென்சேரி யாய்நின்னடிபணியா
தின்பமிக் குண்டென விந்தியவாயில்சென் றிங்குசிலர்
வன்ப ரசுண மதமலை விட்டில்மீன் வண்டிவைபோற்
றுன்ப முறுவ ரிஃதென்கொ லாரணத் தொல் பொருளே(6)

விருத்தம்.

ஆரணவெம்பரி பூரணவெங்குற மாமகடன்கொழுநனாயேன்
வாரணி யுந்தன பாரமடந்தையர் வாசமுறுங்குழல்பேணுதே
காரண னுங்கம லாலய னுர்தொழு நாயக மந்தரவேலோனே
ஓரணு வுன்றயை கூருமாந்தைகள் ஒடிடுமண்டர்கள்கோமானே (7)

நேரிசையாசிரியப்பா.

மானேர் விழியினும் பானேர் மொழியினும்
மின்ன லென்னிடையினும் அன்ன மென்னடையினும்
கட்டுமக்கலையினும் நிற்குமந் நிலையினும்
பருவத முலையினும் புருவமென் சிலையினும்
மையலை யூட்டும் தையலார் மாட்டும்
மனமதை நுழைத்துத் தினமுமெய்யிளைத்துத்
துரும்பு போலாகி விரும்புவ போகிச்
சரவண பவனே குரவணி பவனே
சதுர் மறைப் போதா வநிர் கழற் பாதா
சண்முக நிதியே தண்ணிய மதியே
தென்சேரியில்வாழ் மின்சேர் வடிவேற்
சுப்பிரமண்ய ஒப்பிலாக் கண்ய
வென்றனை நிதமு மொன்றிய மனதோ
டிறைஞ்ச வருள்செயு மெங்கும்
நிறைந்த நின்மல நித்தியப் பொருளே. (8)

நேரிசை வெண்பா.

பொருளறிந்தோர் போற்றிப் பொருளாக வெண்ணுப்
பொருளறிந்து தேடும் புலையற்—கருள் சுரந்துன்
பொன்னடியே போற்றிசெயப் போதமருடென்சேரி
மின்னிடுவேற் கையா விரைந்து (9)

கட்டளைக் கலித்துறை.

விரைசேர் கடம்பணிந்து தென்சேரி வாழ்கின்ற வேலவனே
உரைசே ருனது திருப்பெயர் மாமணியோ கருணை

வரைசே ரடியவன் வாய்மொழிப் பொன்னின் வயங்கிய [தென்
புரைசேர் மொழிக்கா ரிரும்பிற் பதித்தது போன்றதுவே (10)

விருத்தம்.

இறையுங் குணமில் லேனென் நிறையுங் குணமுள்ளாய்
இருளொன்றிய விதயத்தே னொளிதங்கிய வுருவே
மறையொன்றையு மறியேனுன் மறையொன்னுனையறியா
மனமெவ்வழி யவ்வழியான் மனமாகிய னறியாய்
குறையொன்றல பலவுள்ளேன் குறைவின்றிய நிறைவே
கோடிக்கதிகப் பிழையேன் றேடித்தெரிவரியாய்
சிறையென் பிறவியினின்றேன் முறையொன்றிது மொழிவேன் [வேன்
றென்சேரியின் வேலவனே வன்சூர்தெறு சேயே (11)

நேரிசையாசிரியப்பா

சேவற் கொடியான் மேவிற் படையான்
றிருமான் மருகன் பெருமான் முருகன்
செம்பொன் மயிலான் வெம்பும் மயிலா
றிரு விழியான் கூறரு மொழியான்
பாதம் பணிமின் பாதம் பணிமின்
பத்தர்க் கிரங்கும் பாதம் பணிமின்
பாமரர் காணாப் பாதம் பணிமின்
பழமறை பரவும் பாதம் பணிமின்
தென் சேரியத்தன் திருவடி பணிமின்
நக்கீ ரற்கந் நாவருள் செய்து
செக்கச் செவந்த சீரடி பணிமின்
குமர குருபரன் குறை தீர்த்தாண்ட
குமர குருபரன் குரை கழல்பணிமி
னருண கிரியார்க் கன்ற ருள்செய்த

தருண மலரோனுந் தாளிணை பணிமின்
மாம்பழக் கனிக்கு மேம்பாடருளிய
பூம்பத நாளும் புனைந்து போற்றுமின்
நெஞ்ச மவனை நினையா திப்பிர
பஞ்ச மென்னும் பங்கத் தழுந்திப்
பொல்லாப் புழுமலி புல்லிய வுடலு
நில்லாச் செல்வமு நிலையென் றுன்னியு
மாதர் மையலில் வருந்தியு மலைந்தும்
பாதகம் பலவு மேதினம் புரிந்தும்
நரகத் தழுந்த நாடுவீர்
பாகதி யருள் குகன் பதம் பணிவீரே. (12)

நேரிசை வெண்பா.

பணியு மயனு ரனன் றலையும் பாம்பு
மணியு மானு ரருள்கண் — மணியே
கனக்குன் றம் போழ்ந்தவே றென்சேரி யாயென்
வினைக்குன் றம் வீய விடு. (13)

கட்டளைக்கலித்துறை.

விடாது தொடரு நிழலா மிருவினை வீசியிடர்ப்
படாது தமியனைப் பார்த்தரு டென்சேரிப் பண்ணவனே
யடாது புரியு மவரே யெனினு மடைந் தவரைக்
கெடாது புரத்தல் கடனலவோ கிருபாகரனே. (14)

விருத்தம்.

கரவுடைய வன்னெஞ்சக் கள்வனேனுன்
கான்மலரைக் கைதொழுது கழறக் கேண்மோ
குரவலரும் குஞ்சியதென் சேரி வாழும்
கோமானே குறமானின் கொழுநா நாயேன்
வெருவியறி விழந்துபொறி கலங்கி வீழும்
வேளையில் விண்ணப்பமடி யிட்டே னின்றே
உருவமயில் புனை மணியி னோசை கால
னார்தி மணி நாவடக்க வருக வென்றே. (15)

நேரிசையாசிரியப்பா

நான்மறை பரவும் மென்முறையாய் நின்
கான்மலர் துதியாக் கள்வனேன் நாளும்
செல்வச் செருக்கரைப் பல்வகை புகழ்ந்து
மெய்ம்மொழி கலவாப் பொய்ம்மொழி புகன்று
கொலைபல புரிந்து புலையனாய்த் திரிந்து
தன்னூன் பெருக்கப் பிறிதூ னயின்று
மன்னுயிர் வருத்தி மனமிக மகிழ்ந்து
மெய் யடியாரைப் பொய்ய ரென்றிகழ்ந்து
காணார் கேளா ரானார் பாலருள்
பூணாதவர் மனம் புண்பட நகைத்துக்
கோளுரை புகலாக் கேளிரைப் பிரித்துக்
கொடுப்பவர் தம்மைக் கொடே லெனத்தடுத்
தித்திறத் தீமைக ளெண்ணில வியற்றி
யறவழி தாண்டி யரும்பழி பூண்டு
பொல்லாப் பிறவிப் புணரியுள் வீழ்ந்து
சொல்லாத் துயரஞ் சூழ்ந்து மெலிந்து
பாழா நரகில் விழா வாறு
விண்ணவ ருக்கா விடமுண் டருளிய
வண்ணலார் பெற்ற வறுமா முகவ
வெள்ளை யுரைத்த வகவ லுக்காகச்
செவ்விய கயிலை சேர்த்தோன் சோதர
கல்லார் பொதும்பிற் கரைந்து கதறிய
நல்லார்க் கருளு நாயக வடைக்கலம்
மூகக் குழவியாய் முன்னர்க்கிடந்தழூஉம்
சோகந் தவிர்த்த சுந்தர வடைக்கல
மகவிரு ளோட்டும் பகலவ வடைக்கலஞ்
சுகவடிவான சுடரே யடைக்கல
மரந்தைகள் போக்கு மருந்தே யடைக்கல
பரந்த தொல்புகழ் விருந்தே யடைக்கல
மயிலுகந் தேறும் மணியே மடைக்கல

மயின்முக வேற்கை யரசே யடைக்கலங்
குறக்கொடி மருவுங் கோனே யடைக்கலந்
திரப்படு மிருவினை தீர்ப்பா யடைக்கல
மடைக்கல மென்ன வடைந்த னென்
கடைக்கணித் தாளுங் கருணையங் கடலே. (16)

நேரிசை வெண்பா.

கடக்கரிய புன்பிறவிக் காராழி நீக்கக்
கடக்கரியி னின்றுணைவ கண்பார்—கடக்கரியன்
மான்மருகா தென்சேரி மால்வரையாய் வெற்றிவடி
வேன்முருகா தாணு மகவே. (17)

கட்டளைக் கலித்துறை.

தாக மிகுந்து தவிப்பவனு மவன் றண்ணிய நீர்க்
காக மிகுந்த நசையுடன் றேடு மஃதெனவே
யோக முயன்றுதென் சேரியை நாடுவா ரூகமுளார்
மோக மிகுந்து நரகினி லாழ்குவர் மூடர்களே. (18)

கலிவிருத்தம்

மூடுசிலை திறந்து மூகிழ் முலைக்
கோடு காட்டும் கொடியவர் போகமே
நாடு துன்மதி நாயெனை யாள்வைபோ
பாடு சீர்த்தித் தென்சேரிப் பரா பரா. (19)

நேரிசையாசிரியப்பா.

பராவு மடியார் பழவினை யிருமை
அராவி யகற்றும் அறுமுக வரமே
பிறவிப் பெருங்கடல் கடந்துன் பதமென்
கிற வக்கரை சேர்த் திடுநாவாயே
நில்லாப் பொருள்களை நெடிதளித்திடல் போ
லல்லா தருங்கதி யருள் கற்பகமே
பேரானந்தப் பெரும் போகமெனு

மாரா வமுதரு ளருட் பெருங்கடலே.
நின்னடி சேர நீடு நினைந்தே
னின்னருள் புரிவா யிணையிலா மணியே
கடம்ப மலர்த்தேன் கசிந்து கிடந்த
தடம்புய வரசே தமியனை யாள்வாய்
சென்னியா றுடையான் செவிபுக மொழிந்த
சென்னியா றுடைய சேவக போற்றி
ஆறிரு மருங்குள் வரங்கன் மருகனே
ஆறிரு கரமுள வண்ணல் போற்றி
மலையாள் பெற்ற மகனே போற்றி
நிலையா யெங்கும் நிறைந்தாய் போற்றி
வேலா போற்றி விடையே போற்றி
கோலக் குறமகள் கொழுநா போற்றி
தென் சேரியில் வாழ் சீரே போற்றி
போற்றி புண்ணிய போற்றி
நாற்றிசை புகழும் ஞான பண்டிதனே. (20)

நேரிசை வெண்பா.

பண்டவுணர்ச் செற்ற பரனைத் தென் சேரியனைக்
கண்டவரைப் போற்றக் கருதுகிலேன்—வண்டுளரும்
மையற் குழல்வேன் மதர் நெடுங்கண் மாதரார்
மையற் குழல்வேன் மனம். (21)

கட்டளைக் கலித்துறை.

மனம்போம் வழிபோம் மதியிலியென்மேற் கருணைவைத்தென்
முனம்போந் தருள்புரியாயே லடியனேன் மோதுபிறப்
பெனும் பேர்க் கருங்கடல் நீந்துவதெங்க னிமையவர்க
டினம் போற்றியவருந் தென்சேரி மேவிய தேசிகனே. (22)

கலிவிருத்தம்

தேவ தேவன் றென்சேரி கிரியுளான்
பாவ மூலம் பறித்தருள் பண்ணுவான்
ஓவில் சீர்த்தி யுயர்திரு நாமமென்
நாவுரைத் திடு நான்மறந் தானுமே, (23)

நேரிசையாசிரியப்பா.

நானே புகல்புக் கேனு லருள்செய்
தேனூர் பொழில் சூழ்தென் சேரியனே
மீனேர் விழிக் குற மானுர்முன்சென்
றகிற் புகையிட்டி மூகிற்பகைக் கூட்டிக்
கொங்கலர் தொடையு மங்கதிற் சூட்டிக்
குழவித் திங்களி னழகிய வாணுதற்
கத்தூரி யத்தாற் கத்தூரி தீட்டி
முளரி முகையெனு மிளமுலை யிணைக்குக்
கலவைச் சாந்த நலமுற வீந்து
மற்றும் பலவாய்ச் சொற்றிடும் பணிகளை
யாதரத் தோடு மேதின முடித்துத்
திருவுள மகிழு மருவுள கடம்பா
அருவா யுருவா யருவுரு வாயினை
கன்ம பந்தத்தாற் கதறு மடியனேன்
சன்ம பந்தத்தைத் தவிர்த்தே யாள்வாய்
தண்ணுதற் பெருமான் காதலா
எண்ணுதற் கரிய வெழிற் பரஞ் சுடரே. (24)

நேரிசை வெண்பா.

சுட்டற்ற மெய்ப்பொருளே தென்சேரித் தொல்வரையாய்
மட்டற்ற துன்ப மடுவீழ்ந்து—கட்டப்
படுவேனை யாளப் படாதோ வுனையான்
விடுவேனே வாளா விடின். (25)

கட்டளைக் கலித்துறை.

விச்சை யறிந்தார்க்கு மெய்யருள் செய்யும் விசாகனைப்பூங்
கச்சை யறுக்குங் கனதன வள்ளியின் காந்தனைப் பொற்
பச்சை யிளமயில் வாகனக் கந்தனைப் பன்னிருபூஞ்
செச்சை யணிபுயத் தென்சேரி வேலனைச் சேவிப்பனே. (26)

எண்சீர் விருத்தம்.

சேவேறும் சேவகன்றன் செல்வன்றன்னைத்
தென்சேரி மால்வரையிற் றேவன் றன்னை
நாவேறு பாமணக்கும் பாதன் றன்னை
நம்பினோர் துயர் துடைக்கும் நாதன் றன்னை
நீவேறு நான்வேறென் றெண்ணாதார்க்கு
நித்தியமாம் கதியளிக்கும் நேயன் றன்னை
மூவேறு மூர்த்திகட்கு முதல்வன் றன்னை
முழுமுதலை யடிபணிய முன்னிற்போமே. (27)

நேரிசையாசிரியப்பா.

முத்தமி ழறிந்த முதுபெரும் புலவ
புத்தமு தமரர்ப் புகட்டிய வலவ
பொன்மலை வளைந்தலிற் றன்னிகர் சிவனும்
விசும்பி னுயர்தலிற் பசுந்துழாய் மாலும்
அம்ச முயர்த்தலி னருமறைக் கிழவனும்
அங்குச முடைமையி னானைமா முகனும்
மங்கு லூர்தலிற் றங்க வலாரியும்
பொருவு தென்சேரிப் பொருப்புறை புனித
நின்னரு ளீவாய் பன்னெடு நாளாய்
நெடுங் கடற்பிறவி படுங்கடையேற்குன்
னிருபத மன்றிவே றொருகதி காணேன்
ஆதலா லடியனை யாளும்
மாதரார் மயலில் மயங்கிடா வாறே. (28)

நேரிசை வெண்பா.

மங்காத தென்சேரி மால்வரையா ரென்னெஞ்சக்
கொங்காரும் பூவிற் குடியிருந்தார்—இங்கே
இனியிருக்க வொண்ணா திரும்பிணிகாள் சென்மின்
இனிதிருக்க வேறோ ரிடம் (29)

கட்டளைக் கலித்துறை.

இட்டுண் டறியாத வீணரைப் போல வெமன்கயிற்றால்
கட்டுண் டுழலாது தென்சேரி வாழ்கின்ற சுண்ணியனைப்
பிட்டுண் டருளிய பிஞ்ஞகன் செல்வனைப் பேரொளியை
மட்டுண் டளிபா டியமலர்த் தாரனை வாழ்த்துமினே. (30)

அறுசீர் விருத்தம்.

வாழ்வினின் மகிழ்ந்திடாமன் மற்றுமவ் வாழ்வினின்று
தாழ்வினிற் றுயருறாமற் றாக்கற நிற்குந்தன்மை
ஆழ்கடற் புவியிலெய்து மவர்பெறுஞ் செல்வமென்று
சூழ்வினையேனுக்கீவாய் தூயதென்சேரி வாழ்வே. (31)

நேரிசையாசிரியப்பா.

சேணுயர்ந் திலங்குந் தென்சேரியனே
ஆணவங் கெடுக்கு மாரணமுதலே
உண்டென் றுரைப்போர் ஒருபிழை செயினும்
தண்டனை செய்யக் கண்டனன் மற்றும்
இன்றென வுரைப்போா எதுவினை புரியினும்
நன்றென வேதும் நவைபுரிந் தாயிலை
நடுநிலை யிதோ நவிலாய்
வடுவிலாதிலங்கு வான்சுடர் மணியே. (32

நேரிசை வெண்பா.

வான்முதற் பூத வகையாவான் யாவனவன்
ஊன்முதற் போக முயிர்க்களிப்பான்—நான்முகத்துத்
தேவைச் சிறைவைத்த தென்சேரி யான்றேவர்
கோவைச் சிறைதீர்த்த கோன். (33)

கட்டளைக்கலித்துறை.

கோவே குறவர் வளர்த்த கிளியுங் குலிசமுடைத்
தேவே யளித்த குயிலு மயிலுஞ் சிறிதகலாக்
காவே மறையென் கடலினமுதே யரிபயிலாப்
பூவே புரைதவிர் தென்சேரி மேவிய புண்ணியமே. [34]

அறுசீர் விருத்தம்.

புண்ணியபா வப்பெயர்கொ ளிருவினைக்காட்
டினையறுக்கப் புகுந்த வொள்வாள்
மண்ணிடையிற் பிறப்பிறப்பாங் கடல் கடத்தி
வீடளிக்க வந்த நாவாய்
உண்ணிறையு மஞ்ஞான விருளகல
வென்று மனத் துதித்த பானு
கண்ணிறையுங் காட்சியருள் தென்சேரிச்
சேவகனார் கழற் கால் தானே. [35)

நேரிசையாசிரியப்பா.

சேயுயர் விசும்பிற் காய்கதி ரெறிக்கும்
பரிதியை வென்ற தொருதிருமுகமே
வேண்டுவ நல்கி யீண்டிய புகழ்சால்
கற்பகம் வென்ற தோர் பொற்புறுமுகமே
கங்குலும் பகலு மெங்களை யாண்டு
செங்கோல் செலுத்திய தங்கோர் முகமே
பிரணவ மொழியின் பொருளினை யந்நாள்
அரன்செவி புகன்றதோர் அழகிய முகமே
உரச்சூ ரறுத்தற் கொளிவிடு கூர்வேற்
காத்தை நோக்கிக் கருவிய தோர்முகம்
தினைப்புனங் காக்குஞ் சிற்றிடைச் சிறுமி
யினைப்புகழ்ந் துரைத்த தினியதோர் முகமே
அன்ன வறுமுக வமலன் வாழ்ந்து
மன்னுதென் சேரிமால் வரையை
உன்னிற் பிறவி யொழியு மென்னெஞ்சே. (36)

நேரிசை வெண்பா.

நெஞ்சமது நெக்குருக நீர்விழியி னின்றொழுகக்
கஞ்சமல ரைப்பொருவுங் கைகூப்பிச்—செஞ்சொல்லாற்
போற்றியடை வாருண்ணும் தென்சேரிப் புத்தமுதே
கூற்றமடை யாதெனையாட் கொள். (37)

கட்டளைக் கலித்துறை.

கொண்டே னுளத்துன் குரைகழற் பூவைக் குளிர்நறுந்தேன்
உண்டேன் தொடர்ந்த விருவினைக் கூட்டத்துக் கோரிறுதி
கண்டேன் கடம்பணி கந்தா குறத்தி காதற்கணவா
விண்டேன் துயரமனைத்தையும் தென்சேரிவேலவனே. (38)

விருத்தம்.

வேலுடையான் றென்சேரி வெற்புடையா
னடியனேன் வினைகடீர்க்குங்
காலுடையான் கடல்சூழ்ந்த வுலகமெலாங்
காக்குமா கலந்த செய்ய
கோலுடையான் குறவர் பசுங் கிளியுடனே
சுலிசனருன் குயிலிரண்டு
பாலுடையான் புலியுடையான் பாலனெழு
தருமறைகள் பரவுவானே. (39)

நேரிசை யாசிரியப்பா.

அரும்பெறல் யாக்கை யருளினையதனால்
பெரும் பயனும்பதம் பெறுவதை யுன்னு
தைம்பொறி வழியே யறிவினை விடுத்துத்
துன்பமியாண்டுந் தொலையா விந்த
உலகமாயையின் உள்ளுற வழுந்திப்
பலபல நினைந்துன் பதமலர் மறந்தேன்

தென்சேரியில் வாழ் சின்மய வடிவே
பொன்சேரிமயப் புதல் விழின் சேயே
நாயெனை யாள்வதெந் நாளோ
காய்கதிர் வேற்கைக் கடவுண் மாமணியே. (10)

நான்மணிமாலை முற்றும்.

தென்சேரிவேலன் திருவடி வாழ்க.

உ

வேலுமயிலுந் துணை.

திருப்பள்ளி யெழுச்சி.

ஆசிரிய விருத்தம்.

வானவர் தலைவனே ஞானபண்டிதனே
மாமறை முடிதிகழ் தாமரைப்பாதா
மீனவன் சுரமொடு கூனையும் தீர்த்தாய்
வித்தகனே பரிசுத்த சொரூபா
தேனமர் கடம்பணி மேனியனே சீர்த்
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
சானவி புதல்வனே தானவர் காலா
சண்முகனே பள்ளி யெழுந்தருளாயே. (1)

தோன்றின னருண னிந்திரன்றிசை தோன்றால்
தொலைந்தது காரிருள் சுடரொளி மலிந்த
மீன்கண மறைந்தன மெய்ப்பரம் பொருளே
விரிந்தன மரைமலர் குவிந்தன குவளை
தேன்குல மிழற்றின விவை தெரிகிலையோ
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தீ
நான்தொழும் தெய்வமே நாவலரேறே
நாயகமே பள்ளி யெழுந்தருளாயே. (2)

ஆவ்துடன்மூவர் தேவர்க ளொருபால்
அங்கை நறுமலர் தாங்கினர் நின்றார்
மேவினர் அருமறை விச்சையர் ஒருபால்
வீணைய ரின்னிசை கிளைத்தனர் ஒருபால்
சேவலங் கொடியுடையா யென்னையுடையாய்
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
மூவுலகுந் தொழு முத்தமி ழரசே
முப்பழமே பள்ளி யெழுந்தருளாயே. (3)

மாசறு மாணிக்கமே மணி ஒளியே
மங்குலின் மீதெழு செங்கதிர் வடிவே
பேசறு மானந்த மான சிற்பரமே
பேயனேன் வாழ்விற் பெறற்கரும் பேறே
தேசுறு திருப்பரங் குன்றுறை வாழ்வே
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
காசுறு பிறப்பெனும் காராழி தூர்க்கும்
கைம்மலையே பள்ளி யெழுந்தருளாயே. (4)

எண்டவர் போற்றிடும் திண்டிறன் மலையே
இணையின்றி யிலகு பேரின்ப வாரிதியே
தொண்டர்க ளுளக்கோயில் கொண்டிடும் விளக்கே
துன்பமெலா மறத் தோன்றிடுந் துணையே
தெண்டிரை கரைபொரும் செந்தூரில் வாழ்வே
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
கொண்டணிகர் குழற் குறமகள் கொழுநா
குஞ்சரமே பள்ளி யெழுந்தருளாயே. (5)

சூரறுத்திமையவர் துயர் கெடுத்தவனே
தொன்மறை துதிசெய்யும் பொன்மலர்ப் பாதா
வேரறுப்பாயென வெவ்வினை யனைத்தும்
விற்பனர் போற்றிடுஞ் சுப்பிரமணியா
சீர்மிகுத்திலகு செந்தூரினில் வாழ்வே
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
வாரறுத்துயர்தன வள்ளி பங்காளா
வாரணமே பள்ளி யெழுந்தருளாயே. (6)

பூதங்கள் தொறுமுறை புதுமையின் வடிவே
புத்தமுதே சுடர் பொய்த்த பொன்மலேயே
வேதங்க ளறைகின்ற மாதுங்க மணியே
வேண்டுவ நல்குவான் ஈண்டிய நிதியே
சீதங்கொள் வயற் றிருவாவினன் குடியாய்
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
யேதங்க டவிர்த்தெமை யாண்டருள் புரியு
மெம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே. (7)

வாரிதி துயில் திரு மான் மருகோனே
மாமயி லேறிய கூர்வடிவேலா
நீருக விருவிழி நெக்கு நெக்குருகி
நின்றனர் நின்னடியார் பலரின்னே
சீரகமளித்திடு மேரகத்தரசே
தென்சேரி மேவியதேசிக மூர்த்தி
கேரில தாகிய நின்பணி கேட்போம்
நித்தியனே பள்ளி யெழுந்தருளாயே. (8)

புன்றொழில் மாந்தரைப் புகழ்ச்சி செய்யாதே
பூவல மொருநொடி வருமயிற் பரியாய்
என்றுனைப் போற்றிசெய் தின்னருள் பெறவே
இங்குவந்தோ மெங்கள் சங்கையைத் தவிர்ப்பாய்
குன்றுதோ ருடல்சேர் வென்றி வேன் முருகா
கொங்குறை நறைமலர்த் தொங்கலி னழகா
சென்று நின்றளிவலஞ் செய்பவர்க்கருள்வாய்
தென்சேரியாய் பள்ளி யெழுந்தருளாயே. (9)

பஞ்சின்மெல் லடியுமை யின்சிறு குமரா
பழமுதிர் சோலையினுயர் முருகோனே
கொஞ்சிய குறமகள் குஞ்சரி தழுவும்
குங்கும சந்தன முங்கமழ் புயனே
செஞ்சர ணங்களே தஞ்சமென் றடைந்தோம்
தென்சேரி மேவிய தேசிக மூர்த்தி
யெஞ்சலில் பெரும்புகழா யெனதன்பே
யென்னுயிரே பள்ளி யெழுந்தருளாயே. (10)

திருப்பள்ளி யெழுச்சி முற்றும்.

உ

வேலுமயிலுந் துணை.

வெண்பா வந்தாதி.

மந்த்ரா சலவேலன் மாயூரன் மேல்வெண்பா
வந்தாதி பாட வருள்புரியும்—நந்தாத
வைம்முகத்தான் பெற்ற வறுமுகத்தான் முன்வந்த
கைமுகத்த முக்கட் களிறு.

மலையாள் மகன்முருகன் தென்சேரி மந்த்ர
மலையான் திருமான் மருகன்—உலையாத
வீட்டினன் றேவர்குல மேவலரை வேல்விடுத்து
வீட்டினன் சேவடியே வேண்டு. (1)

வேண்டுவார் வேண்டுவதே யீவான்காண் வெண்மதியம்
பூண்டவார் பொற்சடையான் புத்திரன்காண்—நீண்ட
மயிலான் காண் செந்தூரின் மன்னவன்காண் செங்கை
யயிலான் காண் தென்சேரி யான் (2)

ஆனேறு சேவடியாற் கன்றாள் புகன்றிடுசெந்
தேனூறு மோர்மொழியைச் செப்புவைகொல்—வானுடர்
தம்பெருமான் வந்திக்குந் தென்சேரித் தண்வரைவா
ழெம்பெருமான் றீயேற் கினி (3)

இனியேனு நெஞ்சமே யின்னுக நீத்துத்
தனிவேல வற்காளாச் சார்வான்—றனிபெரிய
பொன்மலையின் மேலாய்ப் புகழ்பெற்ற தென்சேரித்
தொன்மலையை வாயாற் றுதி. (4)

துதிக்கைக் கிரகுவான்ற் தென்சேரித் தூயோன்
துதிக்கைப் பெருமான் துணைவன்—மதிக்கரிய
பாமணக்கு மட்டார் பதமலரான் மாலயற்கு
மாமறைக்கு மெட்டான் மதி, (5

மதியார் புனைசடையான் மைந்தன் மலர்வாழ்
விதியார்ச் சிறைசெய்த வேலன்—கதிசேர்க்கும்
தாளுடையான் தென்சேரித் தண்வரையான் ஏழையெனை
யாளுடையான் என்று மவன் (6)

அவணிவனென் றல்லாதே யண்டமெலா நின்றான்
சுவணவொளி சேர்மயின்மேற் றோன்ற—லவுணப்
பகையொழித்தான் தென்சேரிப் பண்ணவன்காண் பாவத்
தொகையொழிப்பா னுண்டே துணை. (7)

உண்டுகொலோ வுற்றதுணை யுன்னையலா தோருங்கால்
கொண்டலுறை தென்சேரிக் கோமகனே—மண்டிணிந்த
ஞாலந் தனிற்பிறந்து நாளுங் கழித்திருந்து
காலன் கறுத்துவருங் கால். (8)

வருங்கால மென்றோபொன் மாயூரா சேவை
தருங்கால மென்றோவென் றன்மை—ஒருங்கேயும்
ஓர்ந்தருள வொண்ணாதோ தென்சேரி யூர்ச்செல்வ
தேர்ந்துமறை நாடரிய சேய் (9)

நாட்ட மிழந்து நடைதளர்ந்து கோலூன்றிக்
கேட்ட செவியிரண்டுங் கேளாவாய்—வாட்ட
மடையாமுன் தென்சேரி யாண்டவனைப் பாடத்
தடையாமோ நெஞ்சகமே சாற்று. (10)

சாற்றுவது கேண்மோ சகத்தீர்நக் கீரனார்
ஆற்றுப் படைக்கிரங்கு மாண்டவனார்—கோற்றொடியாள்
மின்சேரி டைக்குறப்பெண் மிச்சின் மிசைந்தவனார்
தென்சேரி யென்னவறிந் தேன். (11)

தேனார் பொழில்சூழும் தென்சேரி வாழ்வேலா
மானார் விழிவலைவீழ் மானுகி—யானு
தாவற் றலையாதே ஐயாவீ ரா.று
காவற் புதமுருகா கா. (12)

காமப் பகைவெல்லக் காணேன்வகை யொன்றும்
காமப் பகை வென்றோன் காதலா—காமற்
கொருபுதல்வி நேயாகீர்த் தென்சேரி யூர
வொரு முதல்விசேயா வுளர். (13)

உரைகுழறிக் கண்ணிருண்டு கேளாதே யோய்ந்து
கரைசெய் யரும்பிணியாற் கன்றி—மரியுங்கால்
தாரணியும் வேலா தடஞ்சுனைசூழ் தென்சேரிப்
பூரணனே நீயே புகல். (14)

புகல்புக்க வென்னைப் புரக்கத் தகுமி
தகில் புக் கலர்புக் கவிரும்—முகில்புக்க
காரளக வள்ளிமகிழ் காதலா தென்சேரிச்
சீரவக வென் வினையைத் தீர். (15)

தீராப் பிணிதீரச் செய்யருள்தென் சேரியில்வாழ்
பேராற் பெரியோனே பேணியுன—பேரா
தரிப்பவருக் கானந்த மாக்குவா யாறு
தரிப்பவர்சே யாவித் தகி. (16)

தத்தங் கருமக்குத் தக்கபயன் நீதரவிப்
பித்தன் பலவிரும்பும் பேதைமையென்—முத்தி
நெறிகாட்டுந் தென்சேரி நித்தியனே தீமை
செறிகாட்டிற் சேராமற் செய். (17)

செய்தக்க செய்யார் திருவடியின் மென்மலர்கள்
பெய்தக் கரமாறும் பேசிடார்—உய்தற்கு
வேறே தறிவார் விளங்குந்தென் சேரியனே
நீறே தரியார் நிதம். (18)

நினைப்பார்க் கிடர் கெடுக்கு நேயன்கா ணக்கீ
ரனைப்பார்த் தருள்செய் பவன்காண்—வினைப்பாரம்
தீரும் படியருள்வான் தென்சேரி யான்கூர்வேல்
சூரும் படவிடுவாற் சொல். (19)

சொல்லு மனமுந் தொடரவொணாத் தூயோன்காண்
தில்லை நடராஜன் செல்வன்காண்—தொல்லை
வினையகற்றுந் தென்சேரி மெய்யன் றொழார்மா
சினையகற்றுந் திண்வடிவேற் சேய். (20)

சேரு மிடமறியச் செய்வா ருனையன்றி
யாருமிலர் தென்சேரி யாண்டவனே—சூரும்
மலையு மலையவிடும் வைவேலா மஞ்சார்
மலையின் மகள்பெற்ற வா. (21)

வாவா மயிலூர்ந்து வானவர்சே னாபதியே
மூவா முழுமுதலே முற்றுணர்ந்த—கோவே
அறிவேயென் னாரமுதே தென்சேரி மேவும்
நிறைவேநின் வாழ்வருளா நீ. (22)

வாழ்வான் அடியர் மனத்தகத்தே வள்ளிபதம்
தாழ்வான் கரமலராற் றைவருவான்—சூழ்வானூர்
வேந்தன் சிறைதவிர்த்த வெற்றியான் தென்சேரிச்
சாந்தன் துணையடியே சார்பு: (23)

சாபந் தனிவரையாத் தாங்கு மரன்பாலன்
தாபந் தனைப்போக்குந் தாளன் சீர்த்—தூபம்
மணக்கின்ற தென்சேரி மன்னவனை நெஞ்சே
குணக்குன்ற மென்றுறுதி கொள். (24)

கொங்கை முகங்காட்டிக் கொல்லும் மகளிர்தமைத்
தங்க மெனப்புகழுந் தன்மையொழித்—திங்குன்னைப்
பொன்னே நவமணியே புண்ணியமே தென்சேரி
மன்னே யெனவென் மனம். (25)

மனவாக்குக் கெட்டா மயிலோன்காண் வானோர்
தினமேத்துந் தென்சேரித் தேவன்—புனமேவித்
தேனே யனையமொழித் தெள்ளமுதே யின்னுயிரே
மானே யெனநின்ற வன். (26)

வன்பிறவி நோய்தீர்க்கு மாமருந்தே மெய்யடியார்
துன்பமற நல்லருள்செய் தூமணியே—என்பணிவார்
பாலா வனுகூலா பல்வளஞ்சேர் தென்சேரி
வேலா வருள்செய்க வே. [27]

வேலை சுவறவிடும் வேலன்காண் தென்சேரிக்
கோல வரைமேவும் குமரன்காண்—காலை
இளஞாயி றேய்க்கு மெழிலன்காண் எங்கும்
உளனா யிருப்பன் உணர். [28]

உணர்ந்தார்க் குணர்வறியான் தென்சேரி யூரன்
மணந்தாழ் குழலுமையாள் மைந்தன்—வணங்காரை
வாட்டும் கதத்தான் மறப்பெண் குழற்குழலர்
சூட்டும் கரத்தானைச் சொல். [29]

சரத்தாற் றொழுதறியேன் கன்னெஞ் சுருகேன்
சிரத்தாற் பணியேன் சிறியேன்—விரைத்தார
பாயூரா தென்சேரி பாலையா யிராறு
கேயூரா வென்முறையைக் கேள் [30]

கேளார் புரமெரித்தான் கேட்டுள் மகிழ்ந்திடவந்
நாளோர் மொழி புகன்ற நாயகனே—வாளாற்ற
கண்ணார் மயலிற் கதறுமற் றென்சேரி
யண்ணா லடியேனை யாள். [31]

ஆண்டவா தென்சேரி யாறுமுகா வாசருளே
பூண்டவா வென்றடியன் போற்றியுனை—வேண்டவா
ராதிருக்கிற் செய்வதெனி ராகவனார் மாமருகா
தாதிருக்கும் பூம்பாதந் தா. [32]

தானே தனக்கொத்தாய் தண்ணருள்கூர் வாய்புண்ய
வானே துனிதீர் வகையறியேன்—கோனே
தனியாய்த் தவிக்கின்றேன் தென்சேரித் தந்தாய்
இனியாய் எனக்குனருள். [33]

ஈவா ருமையல்லா தில்லென்று செல்வர்பால்
மேவா ருமைசெல்வன் மெய்ப்படியே—ஓவாதி
யாவுந் தருமென் றறிவார்க்குத் தென்சேரித்
தேவுந் தருமென்று தேர். (34)

தேரிற் பல வடியார்ச் சேர்த்தனையுன் சேவடியிற்
பாரிற் பலரையினும் பாலிப்பாய்—சாருமெனை
ஆட்கொண்டா லாகாதோ தென்சேரி யாய்நமனிந்
நாட்கொண்டு போகாமு னம் (35)

நம்பினே னுன்பதமே நாயினேன் தீவினையால்
வெம்பினே னுள்ளமிக வேசற்றேன்—உம்பர்
பதியா திருகரனே தென்சேரி யாய்தொல்
பதியாய் பரிபாலிப் பாய். (36)

பாயு மலமொழுகும் பாண்டத்தை நாய்நரியும்
பேயும் பெரிதுண்ணும் பெற்றியதென்—றாயும்
அறிவின்றி யாதரித்தேன் தென்சேரி யாய்நன்
னெறியொன்று நீயளிக்க நேர். (37)

நேராத வின்ப மயமாகி நித்தியமாய்ப்
பேரா தரிப்பவர்தம் பேறாகி—ஓராதார்
உள்ள மொளிக்கும் ஒளியுருவாம் தென்சேரி
வள்ள லடிபணிகு வல். (38)

வலைத்தலை மான்கண் மடவார்க் குடையா
நிலைத்தடு மாறுவது நிற்க—மலைக்குமரி
சேயா சிவகிரியாய் தென்சேரி யாய்கார்த்தி
கேயா வரமருளெற் கே. (39)

கேடில் விழுப்பொருளே கெட்டேன் திருவருளைத்
தேடுங் கருத்தின்றிச் சீரழிந்தேன்—ஓடி
வருவாய் மயிலேறித் தென்சேரி வள்ளால்
தருவாய் நினது மலர்த் தாள். (40)

தாணடுங்கா முன்னுன் தலநடந்தி லேனந்தோ
வேமினடுங்கண் மாதர் விருப்பகலேன்—வேணடுங்க
வென்றான் குமரா வினை தீர்க்கும் தென்சேரி
என்றேன் அருள் செய்வையே. (41)

எனோவென் மீதிலுனக் கித்தனைவா திருநீதி
தானோ தயாபரனே சண்முகனே—வானோர்
சிறை நீக்கி யாண்டாயே தென்சேரி யாயென்
குறைநீக் குவதரிதோ கூறு. (42)

கூற்றம் குறுகிநலமைக் கொண்டுபோ முன்மனமே
மாற்ற மனக்கரிய மாண்புடையாய்—தோற்றம்
ஒடுக்கமிலா உத்தமனே தென்சேரி யூர
இடுக்கணொழி என்றே இறைஞ்சு. (43)

இறையுங் குணமில்லே னென்றாலு மேழை
குறையுந் தவிர்த்தாண்டாற் கோதோ—மறையின்
முடிவேசீர்த் தென்சேரி முற்றுணர்வே யன்பின்
வடிவேயெற் கின்னருள்செய் வாய். (44)

வாயார வாழ்த்தி வணங்கு மடியவர்தங்
நோயான காட்டை நொடிப் பொழுதின்—மாய
அழிக்குமர னார்சேய்தென் சேரியிரா று
விழிக்குமர னார்கந்த வேள். (45)

வேளை மடமாதர் வேற்கண்ணை வெல்ல வுன
தாளை விடவேறு தஞ்சமிலை—நாளை
நமனுக்கு நானஞ்சேன் தென்சேரியாய்நம
டமெனக்கு நல்குன் புரம். (46)

டரப்பார் பிறரென்கை புன்மைபீர். தாழும்
பொருப்பாற் கடல் கடத்தல் போலும்—உரச்சூர்
அறுத்தா னவனேதென் சேரியூ ரன்பற்
றறுத்தான் சரணே யரண். (47)

சரவணத்தி லேவளர்ந்த சண்முகனா ரின்பேர்
சிரவணத்தி னாசையறும் சென்று—சிரவணக்கம்
செய்யப் பிறப்பொழியும் தென்சேரியா யென்றே
யுய்யப் புலைநெஞ்சே ஓது. (48)

ஓதா துணர்ந்திடுவோன் உள்ளன்பி னாருள்ளம்
ஏதா யினுமுடிக்கு மெம்பெருமான்—வேதா
முடித்தலையின் மோதுகுகன் தென்சேரி மூர்த்தி
வடித்தலைவேற் கையன் வழுத்து. (49)

வழுத்தலிலன் வாயார வாணாளி னையேன்
இழைத்தனென் கைதவ மெண்ணின்றிப்—பிழைத்தனென்
என்றாலு நின்னடியை யீந்தாள்வாய் தென்சேரிக்
குன்றாய் குழக வெனக்கு. (50)

177076

குத்திரங் கோள்களவு கோறலத னைத்தின்னல்
இத்திறத் தீமை யியற்றுபவ—ரைத்துறந்தன்
அன்பர்தமக் காளாக்கித் தென்சேரி வாழ்வேயென்
புன்புறவி நீக்கிப் புர. (51)

நீக்கமற நின்ற நினைவி லெழுஞ்சுடராய்
வாக்குமன மொன்றா வடிவாகி----மீக்குன்றும்
சூரும்படவென்றாய் தென்சேரித் தொல்வரையாய்
காரும் கதியித் ததி. (52)

ததிபால் களவாடும் தாமோதரனும்
விதியால் அறிவரிய மேலோன்—புதல்வாபூந்
தாளா துயர் தீராய் தென்சேரித் தண்வரையாய்
ஆளாயினி யேழை யை. (53)

ஐவர்க் கடிபவனாய் அல்லற் கடல் வீழ்ந்தேன்
தெய்வக் கரிமருவும் செவ்வேளே—உய்வெற்கு
நல்குவது மென்றாளோ தென்சேரி நன்மலையில்
மல்குவடி வேல வா. (54)

வானாகிக் காலாகித் தீயாய்நீ ராய்மண்ணாய்த்
தானாகி நானாய்த்தனிப் பொருளாய்—ஊனாகி
உள்ளதுமா யில்லதுமாந் தென்சேரி யூரனெனும்
புள்ளிமயி லானற் புதல்வ. (55)

புத்தமுதே முக்கனியே பொற்குவியே கற்பகமே
முத்தமிழ்தேர் மெய்ப்பொருளே முற்றுணர்வே—வித்தகமே
தென்சேரி வேலவனே தேவர்கள்சே னாபதியே
என்சோர் வினையகற்று மே. (56)

அகனிலத்துன் னன்பர்மன வம்புயநற் பூவை
மிகமலர்த்துஞ் செங்கதிரே வேழ—மகள்விழியாம்
மைப்போ தலர்த்த வருநிலவே தென்சேரி
வைப்பே பிறப்பொழிய வை. (57)

பிறர்தம ரிவ்விவரென் பேதமற நீதி
நெறியிஃ தென்றறிய நெஞ்சே—மறைமுறைசெய்
செங்கமலைத் தாட்டுணையான் தென்சேரிச் சேவகனைப்
பங்கமலக் காட்டைவிடப் பற்று. (58)

காண்கின்ற வெப்பொருளும் கார்த்திகே யன்னென்று
பூண்கின்ற பத்தி புரிந்தறியேன்—சேண்கன்
றெறிந்தோன் மருகவோ தென்சேரி எந்தாய்
பிறந்தேன் புரிந்தேன் பிழை. (59)

பிழையிற் பெரியன் பிழைப் பறியேன் பாவக்
குழியிற் றடுமாறுங் கோலம்—கழியக்கண்
பார்மேலா தாரா பரைபாலா தென்சேரிக்
கூர்வேலா தீராய் குறை. (60)

குற்றம்பல் கோடி கொடியேற் குறித்தெனினும்
செற்றங்கொள் ளாமற்றென் சேரியாய்—முற்றத்
திருத்தியுன் பாதமலர் சேவிப்பார் காற்கீழ்
இருத்தியென் னேதமகற் றே. (61)

எத்தார் மனிதராய் என்பிறந்தா ரையகோ
நீத்தார் பெருமை நினைந்திராய்—மூத்தாரை
முன்வனத்தி லேவினைசீர்த் தென்சேரி வாழ்முதல்வா
வென்மனத்தின் மேவிடுக வென்று. (62)

என்று முனக்கேவல் செய்பவரை யேத்துகிலேன்
நின்று தொழுகிலேன் நின்கோவில்—சென்றுவலஞ்
சுற்றுகிலேன் தென்சேரித் தூயோனே சொல்லுமுறை
மற்றறியேன் காலன் வரின். (63)

காலாவுன் கைத்திறமை காட்டடா காண்குவமெலன்
மேலேயுன் பாசம் விடுதியோ—சூலா
யுதன் குமரன் தென்சேரி யூரன் மலையாள்
சுதன்வடிவே லன்றோ துணை. (64)

அன்றவுண மாதர் வயிற்றி னழன்மூளச்
சென்றவடி வேலைத்தென் சேரியாய்—இன்றொருகா
லுயேன் வினையடவி நாசமுற நேசமுடன்
நீயே விடுகவிவ ணின்று. (65)

நில்லாது செல்வ மிளமைநீ ரிற்குமிழி
யல்லாது வேறொன் றலநெஞ்சே—எல்லாமுந்
தானாய் விளங்குந் தனிப்பொருளாந் தென்சேரி
யானா மவனே யரண். (66)

ஆரணி யத்தே நின்றும் அருந்தழலி னுப்பண்
கரண மடக்கியுமென் கண்டார்—இரணியத்தை
மானு மயிலேறும் தென்சேரி மால்வரையெம்
மானை வழுத்தாத வர். (67)

வருமேந் தருமோவிவ் வல்வினையேன் மீதும்
கருமந் தமைநீக்கிக் காக்கு—மருமருந்தே
யிவ்வேளை யானுய்ந்தா லென்னகெடுந் தென்சேரிச்
செவ்வேளை யாமெனக்குச் செப்பு. (68)

செப்புந் தரமாமோ தென்சேரி யாய் நின்சீர்
இப்புல் வியனு விறையளவும்—முப்புரங்கள்
செற்றான் குருநாதா செந்தா மரைப்பாதா
உற்றேன் புகலென் றுனை. (69)

உன்னை யொழிய வொருவரையும் உன்னுகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—என்னை
விரைந்தா ளுடையவுனே தென்சேரி வேலா
இரங்கே னுனதா ளினி. (70)

இணையொன்று மில்லாதாய் என்று முளதாய்
அணைகின்ற வர்க்கின்ப மாகிக்—குணமில்லாப்
பித்தர்க் கரியதுகாண் தென்சேரிப் பேரோதும்
பத்தர்க் கெளியன் பதம். (71)

பதபங் கயமருளிப் பாலிப்பாய் வேலா
மதவெங் கரியா மவுணற்—கதமிஞ்சிச்
சாய்த்தாய் சரண்புகுந்தேன் தென்சேரித் தண்வரையில்
வாய்த்தாய் தருவாய் வரம். (72)

வரம்பிகந்த மாபூத வைப்பெங்கும் தானாய்
நிரம்புகந்த நாதா நெடுமா—திரம்புகுந்த
சீர்த்தியாய் தென்சேரித் திண்வரையாய் கட்கடையாற்
பார்த்தியா னீதற் பரா. (73)

பராபரன்காண் பாருலகும் விண்ணும் பரந்த
சராசரமி யாவும் சமைந்த—நிராமயன்காண்
சிந்தா குலந்தீர்ப்பான் தென்சேரி வேலவன் காண்
மந்தா கினியின் மகன். (74)

மக்கட் பிறவி யரிதிதுபோய் மாய்வதன்முன்
முக்கட் சிவன் றந்த மொய்ம்பனையே—நெக்குருகிக்
கண்ணீர் பெருகத்தென் சேரியாய் காவென்பீர்
எண்ணீர் பிறரையிறை யென்று. (75)

இறையேனு ஞானமிலா வென்புன் கவிதையைக்
குறையேது மில்லானே கொள்க—துறைவாயன்
பொய்யா மொழிகவிதை பொய்க்கவிதை யாச்செய்த
மெய்யா தென்சேரிவாழ் வே. (76)

வேண்டுவதி யானுன்னை வேறொன்று மன்றுகாண்
ஆண்டவனே தென்சேரி யாரணனே—யாண்டும்
மறவா துன்றுபுகழ் வாழ்த்து மடியார்க்
குறவா யிருப்பதா கும் (77)

உமையா ளருள்பாலா தென்சேரி யூர
வெமையாள் கதிநீயே யெந்தாய்—சுமையாம்
முடைநா றுடல்வளர்த்த மூர்க்கனேன் வாழ்விற்
கடைநா ளுயிர்போகுங் கால். (78)

காலங் கடந்த பழம்பொருளே கண்ணாக்
கோலந் தனைக்கண் டுளங்குளிர்ந்து—ஞாலம்
புகழுநீ தென்சேரிப் பொன்வரையின் மீது
திகழுமீ தன்பின் றிறம். (79)

திறப்படும் தீவினையைத் தீர்த்தென்னை யாளப்
புறப்படும் பொன்மயின்மீ தேறிச்—சிறைப்படும்
வானோர் தலைமீட்ட வான்சுடரே தென்சேரி
ஞானோ தயனேயிந் நாள். (80)

நாளைக்கோ வின்றோ நமன்வருநா ளறியேன்
ஆளக் கடனுனக்கென் னப்பனே—காளக்
கறை மிடற்றோன் காதலா தென்சேரிக் கந்தா
குறை முடித்தென் மீதினருள் கூர். (81)

கூர்வேல் பழித்த விழியாலும் கோட்டாலும்
கார்வானிற் காணும் குழலாலும்—சோர்வாக்கும்
மாதர் மயலின் மயங்காமற் றென்சேரி
நாதர் பதம்பணிவே னுன். (82)

நானென தென்னும் நவையொழித்தார் தாமன்றே
கோனென நின்னைக் குறித்தறிந்தார்—தேனெனத்
தித்திக்கும் வள்ளி மணவாளா தென்சேரி
முத்திக்கு வித்தே மொழி. (83)

விச்சைத் திருவுருவைத் தென்சேரி வேலவனை
நச்சித் துதிசெய்த நாவிற்கு—மெச்சிக்
கொடுக்க பரிசனவாக் கொள்ளார்க்குக் கூற்றைக்
கடத்தல் அரிதரிதாங் காண். (84)

அறவாழி யாரியனே தென்சேரி யண்ணால்
பிறவாமை பேணிப் பெறுக—பெறுவார்
மறப்பின்றி யுன்கழற்கே வண்டமிழ்ப்பூச் சூட்டும்
பிறப் பொன்றே பேணியவென் பெட்பு. (85)

பேயேன் பிழைபெரியேன் பீடறியாப் பெற்றியேன்
நாயேன் சிறிது நலமில்லேன்—தீயேனான்
ஆயிடினுந் தென்சேரி யாண்டவநீ கைவிட்டாற்
போயடைவ தெங்கோ புகல். (86)

புறத்தார்க்குச் சேயோனைப் புண்ணியனை யன்பின்
திறத்தார்க் கருள் புரியும் சேயை—அறத்தா
றறிவிக்கு மாரியனைத் தென்சேரி யானைச்
சிறையைத் தவிர்ப்பானைச் சேர். (87)

சேவற் கொடியானே தென்சேரி யுள்ளானே
ஆவற் சுலமடங்க வாள்வானே—யாவர்க்கும்
மேலாம் பரஞ்சுடரே மெய்ஞ்ஞான பண்டிதனே
காலாந் தகபால கா. (88)

காக்கக் கடனுனக்கே கார்த்திகே யாகடம்பா
வாக்குமனக் கெட்டா வானுருவே—போக்கும்
வரவுமிலாப் புண்ணியனே தென்சேரி வள்ளால்
பரவு மெனையாளப் பார். (89)

பாராதி பண்டப் பரப்புமுன் டாக்குளித்தாய்
ஆரா வமுதே யருளுருவே—வாராய்
வடிவேற்கை யானவனே வாது புரியா
தடியேன்முன் றென்சேரி யாய். (90)

ஆய்ந்தறிந் துள்ள மடங்கு மவர்வினைகள்
தேய்ந்தழிந் தோடச்செய் தென்சேரி—வாய்ந்த
சுடரே சுகவடிவே சொற்பொருளே யேழை
யிடரே யகற்றி யிடு. (91)

இடுக்கண் களைய விதுதருண மெந்தாய்
படைக்கண் மடவார்ப் பயந்துன்—னடைக்கலமென்
றிப்போதி யானடைந்தேன் றென்சேரி யெம்மானே
மெய்ப்போத மோதுகுரு வே. (92)

வேடர்குலக் கொடியை வேட்டுப் பணிபுரிந்த
வேடங் கரந்துமலர் வேங்கையாய்—மாடங்கு
நின்றான் றிருமலன்காண் நிர்க்குணன்காண் தென்சேரிக்
குன்றான் குறைதவிர்க்குங் கோன். (93)

கோனெங் குமரன்காண் கூர்வேற் செழியற்குக்
கூனுஞ் சுரமுங் குறைத்தோன்காண்—ஈனந்
தவிர்த்தாள்வான் றென்சேரித் தண்வரையான் முத்திக்
குவித்தாவா னென்னுங் குகன். [94]

குகனே குறத்திக் குகந்தவனே யாறு
முகனே முருகனே முத்திச்—சுகநீ
தருகுவாய் தென்சேரித் தண்வரையின் வாழ்வே
யருகுவா தண்டாயுதா. (95)

ஆக்கி யளித்தழிக்கு மையனீ நான்மறையின்
போக்கு முரைத்திளைக்கும் புண்ணியநீ—நீக்கிய
மும்மலத்தார் கண்ட முழுமுதனீ தென்சேரி
நின்மலத்த கண்டவுரு நீ. (96)

நீபமணி மார்பா நினக்கபய மென்றடைந்தேன்
கோபமின மாமா கூர்வேலா—பாபத்
தொகையழித்துத் தென்சேரித் தொல்வரையாய் முத்தி
வகை தெரித்துன் வாழ்விலெனை வை. [97]

வைகலக்க வேற்குமரன் வானவர்கோ வின்குமரி
மெய்கலந்த வேந்தன் விசாகன்வேள்—பைகலந்த
பாம்பணையானும் பரவுந்தென்சேரி யான்பாதம்
காம்பணிய நல்கு நமக்கு. [98]

நமரங்காள் தென்சேரி நாதற் றொழுமின்
பமரஞ்சேர் நீபற் பணிமின்—முமலம்போய்
முத்தி பெறலாகு மூவுலக மும்பெறலாம்
சித்தி பெறலாந் திடம். [99]

திடனில் மடநெஞ்சே செப்புவது கேண்மோ
இடனில் பொழுதுமியம—படரால்
உலையுந் தருணத்து முள்ளுக தென்சேரி
மலையின் வருசெம் மலை. [100]

வாழி.

வாழி தென் சேரிகிரி வாழிசிங் காரகுகன்
வாயிழிந்த் ராணிமகள் வள்ளியுடன்—வாழி
மயில்வாழி வாரணமா மன்னுகொடி வாழி
அயில்வாழி நூல்வாழிய.

முற்றிற்று.

உ

வேலுமயிலுந் துணை.

தென்சேரிகிரிப் பதிகம்.

வேலன்காண் விண்ணவர்க்கு மேலானோன்காண்
        வித்தகன்காண் விடையேறும் விமலனார்க்குப்
பாலன்காண் புல்லுயிரும் பாலிப்பான்காண்
        பங்கயனும் சங்கரியும் பழிச்சநின்ற
கோலன்காண் குறமகளின் கொழுநன்றான்காண்
        குஞ்சரமா முகற்கிளைய கோமான்றான்காண்
சீலன்காண் பரங்குன்றிற் றிகழுவான்காண்
        தென்சேரி யான்காணென் சிந்தையானே. (1)

குகனவன்காண் குமர குருபரனையாண்ட
        கோனவன்காண் மீனவிழி யுமையாள்பெற்ற
மகனவன்காண் மயிலேறு மாணிக்கங்காண்
        மதியிரவி யியமான னான்வானா
சுகனவன்காண் சுடுமனனீர் நிலமானான்காண்
        தொல்லைவினைத் தொல்லை யறத்தோற்றுவான்றே
சிகனவன்காண் செந்தூரிற் செல்வன்றான்காண்
        தென்சேரி யான்காணென் சிந்தையானே. (2)

மருத்துவன்காண் மடிவில்லாப் பிறவிநோய்க்கு
        மலைமகளாந் தலைமகட்கு மகனாவான்காண்
பொருத்துவன்காண் பல்லுயிர்க்கும் போகந்தன்னை
        புண்ணியன்கா ணொண்ணுபவ ரகத்தேதன்னைப்
யிருத்துவன்கா ணெங்கெங்கு மிலகுவான்காண்
        ஈச்சுரன்காண் தீச்செயனின் றெளியனேனைத்
திருத்துவன்காண் திருப்பழனித் தெய்வதங்காண்
        தென்சேரி யான்காணென் சிந்தையானே. (3)

காப்பவன்காண் கற்பொதும்பிற் கீரன்றன்னைக்
கரைபொருத திரைவேலைக் கருணையான்காண்
பூப்பவன்காண் அடியர்மனப் புதியகோயில்
பொன்னுலக மன்னவனைப் புரந்தகோன்காண்
தீர்ப்பவன்காண் அடிபணிவார் தீராநோய்கள்
திருமாலின் மருமான்காண் செச்சைமாலை
சேர்ப்பவன்காணே ரகத்துச் செம்மலான்காண்
தென்சேரி யான்காணென் சிந்தையானே (4)

ஆணலன் காண் பெண்ணலிஃது மல்லாதான் காண்
அருமறையா னறிவரிய வண்ணலான் காண்
காணலன்காண் கருதலரின் கண்ணினென்றும்
கம்பமத கரிக்கிளைய நம்பியான்காண்
நாணலன்காண் குறமகள் குற்றேவல்பூண
ஞானவடி வர்ணவன்காண் நம்பினோர்க்குச்
சேணலன்காண் குன்றுதொறு மாடல்சேர்வான்
தென்சேரி யான்காணென் சிந்தையானே. (5)

கருணைபொழி யீராறு விழியினன்காண்
கஞ்சனை வெஞ்சிறையடைத்த கடம்பன்றான்காண்
தருணமல ரனையதிருத் தாளன்றான்காண்
தத்துவத் துளடங்காத தன்மையான்காண்
அருணகிரி யார்க்கருளு மத்தன்றான்காண்
அரிய பழமுதிர்சோலை பதிகன்றான்காண்
சிரவணைக்கஞ் செய்புமவர் வினைகடீர்க்குந்
தென்சேரியான் காணென் சிந்தையானே. (6)

காவலன்காண் தேவர்களைக் காத்தகோன்காண்
கண்ணுதலார் கண்ணுளமாங் கனியினுக்காப்
பூவலன்காண் மயிலேறும் புண்ணியன்காண்
பொய்யாத மொழிகவிதை பொய்யாச்செய்த
நாவலன்காண் நாவேறு பாமணக்கும்
நற்பதன்காண் கற்பகங்காண் நடனபாதச்
சேவலன்காண் சிவகிரிவாழ் சேந்தன்றான்காண்
தென்சேரி யான்காணென் சிந்தையானே (7)

97B
17-98

பிறப்பில்லான் பேருமிலாப் பெருமையான்காண்
பிஞ்ஞகனார் செவியிலுபு பேச்சினான்காண்
இறப்பில்லான் சிரகிரிவா ழீச்சுரன்காண்
இமையவர் கோவின்புதல்விக் கிசைந்தகோன்காண்
மறப்பில்லான் மாணடியார் தம்மையாள
மரகதமா மயிலுடையான் றன்னின்மிக்க
சிறப்பில்லான் திருத்தணிவாழ் சேவகன்காண்
தென்சேரி யான்காணென் சிந்தையானே (8)

ஆரியன்கா ணமரருக்கா வவுணர்த்தேய்த்த
வனகன்கா ணகவிருளை யகலவோட்டும்
சூரியன்காண் சுகவடிவாம் தூயோன்றான்காண்
தொன்மறைசொல் பொன்மலர்த்தாட் டோன்றான்
பூரியர்கா ணரியபரம் பொருளாவான்காண் [காண்
பொருணன்கு தருங்கதிரைப் புனிதன்றான்காண்
சீரியன்காண் டிருமுகமா றுடையசேய்காண்
தென்சேரி யான்காணென் சிந்தையானே. (9)

அரியயன்கா ணரியவர னருளுவான்காண்
அகமொழிந்த வகமுடைய வடியரல்லார்க்
கரியவன்கா ணனந்தமய மானான்காண்
அற்புதன்காண் வெற்பரசி யளித்தகோன்காண்
கிரியவன்காண் கேடென்று மில்லாதான்காண்
கிள்ளைகடி வள்ளியடி கெஞ்சினோன்காண்
திரியவன்காண் சிகியூர்ந்து தேசமெங்கும்
தென்சேரி யான்காணென் சிந்தையானே. (10)

தென்சேரிவேலன் றிருவடிவாழ்க.
வேலுமயிலுந் துணை
முற்றும்.

உ

வேலும்மயிலுந் துணை.

ஸ்ரீ அருணகிரிநாத ஸ்வாமிகள் அருளிச்செய்த

தென்சேரிகிரித் திருப்புகழ்.

எங்கேனு மொருவர்வர அங்கேக ணினிதுகொடு
இங்கேவ ருனதுமயல் தரியாரென்

றிந்தாவெ னினியஇதழ் தந்தேனை யுறமருவ
என்றாசை குழையவிழி யிணையாடி

தங்காம லவருடைய வுண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவெபறி கொளுமானர்

சங்கீத கலவிநல மென்றோது முதநிவிட
தண்பாரு முனதருளை யருள்வாயே

சங்கோடு திகிரியது கொண்டேயு நிரைபிறகு
சந்தாரும் வெதிருகுழ லதுலூதித்

தன்காதல் தனையுகள ஒன்றேழு மடவியர்கள்
தன்கூறை கொடுமரபி லதுவேறுஞ்

சிங்கார அரிமருக பங்கேரு கனுமருள
சென்றேயும் அமாருறை சிறைமீளச்

சென்டாடி அசுரர்களை வென்றானெ அடியர்தொழ
தென்சேரி கிரியில்வரு பெருமாளே.

25 APR 1923

புஸ்தகம் கிடைக்குமிடம்:—

1. C. R. நாதமுனிக்கவுண்டர்
புரோப்ரைட்டர்,
ஸ்ரீ கிருஷ்ண பிரிண்டிங் ஒர்க்ஸ்
திருப்பூர்.

2 R. குமாரஸ்வாமிதேசிகர்,
வைத்தியர்,
துளசிராவ் வீதி,
திருப்பூர்.